**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி III - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டத்தின் பகுதி III இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதிய பிபீசீ இலக்கம் (2014) 17 மொத்த இலக்கம் (520) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அம்பாந்தோட்டையை சர்வதேச மையமாக அபிவிருத்தி செய்வதன் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தலும் வீதி வலையமைப்பை அபிவிருத்தி செய்தலும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். எனவே, அதிவேக பாதையின் நீடிப்பு வேலைகள் 04 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் வெட்டிய தொடக்கம் அன்தரவேவ வரையான அதிவேகப்பாதையின் 15 கிலோமீற்றர்களின் நிர்மான வேலைகள் செயற்திட்டத்தின் பகுதி III இன் கீழ் செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி III இன் கீழான நிர்மான வேலைகளின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36,174 மில்லியன் ஆக உள்ளதுடன் சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 31,574 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 252 மில்லியன் ஆகிய தொகைகள் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 நவம்பர் 24 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | 252 | 33,555.79 | 9,300 | 9,178 | 16,130 |
| **இலங்கை அரசாங்கம்** | - | 2,618.20 | 100 | 681 | 1,146 |
| **மொத்தம்** | **252** | **36,173.99** | **9,400** | **9,859** | **17,276** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் பகுதி III இன் கீழான அதிவேகப்பாதையின் நிர்மானத்திற்கான ஒப்பந்தமானது வேண்டப்படாத அடிப்படையின் கீழ் 2013 பெப்ரவரி 05 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய கடன் உடன்படிக்கையானது 2014 செப்டம்பர் 16 இல் கடன் வழங்கும் முகவருடன் கையொப்பமிடப்பட்டிருந்தது. கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி – III இன் கீழான வெட்டியா தொடக்கம் அந்தரவேவ வரையான தெற்கு அதிவேகப்பாதையின் பகுதி மாறலின் நிர்மானத்திற்கான பௌதீக செயலாற்றல் உரிய திகதியில் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 98.51 சதவீதத்திற்கு எதிராக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 49.77 சதவீதமாகவே காணப்பட்டது. 2018 சனவரி 24 இல் உள்ளவாறான நிர்மானத்தின் பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 10 மாதத்திற்கான கால நீடிப்பானது, தளத்தினை கையளிப்பதில் காணப்பட்ட தாமதம், நிர்மானத்திற்கான மூலப்பொருட்களை வழங்குவதில் சிக்கல் மற்றும் பிரதானமாக நில வேலைகள் மற்றும் சுரங்கப்பாதை மற்றும் பாலங்களின் நிர்மானம் போன்றவற்றின் கீழான வேலைப்பரப்பில் தொடர்ச்சியான மாற்றம் போன்ற காரணங்களினால் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனை 4.2 இன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் கடன் உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு முன்னர் 28 நாட்களிற்குள் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்ததாரர் கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட 2014 செப்டம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 423 நாட்கள் தாமதத்துடன் 2015 திசெம்பர் 07 அன்றே செயலாற்றல் பத்திரத்தினை சமர்ப்பித்திருந்தார். மேலும், செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயமானது ஒப்பந்ததாரரினால் செயற்படவேண்டி இருந்த போதிலும். செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்ள ஏற்பட்டிருந்த கிரயம் மொத்தமாக ரூபா 99 மில்லியன் இடைக்கால கொடுப்பனவு சான்றிதலினூடாக ஒப்பந்ததாரரிற்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்தின் அளவைப்பட்டியலிலுள்ள ஏற்பாட்டு மொத்தம் மற்றும் எதிர்பாராதவைகளின் கீழான உருப்படிகளை கருத்தில் கொள்ள முற்பணங்களை கணிப்பிடுவதில் காணப்பட்ட அச்சிடல் தவறு காரணமாக மொத்தமாக ரூபா 413 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அரச பெறுகை வழிகாட்டலின் 5.4.4(1) ஆம் பந்திக்கு முரனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம், மொத்தமாக ரூபா 315.74 மில்லியனை மிஞ்சிய செய்து முடிக்கப்பட்ட வேலைகள் மீதான இடைக்கால கொடுப்பனவு சான்றிதல்கள் மீளாய்வு நோக்கத்திற்காக கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 191.85 மில்லியன் தொடக்கம் 299.21 மில்லியன் என்ற வீச்சிலான பெறுமதியுடைய இடைக்கால கொடுப்பனவு சான்றிதல்கள் மீளாய்வாண்டின் போது 06 நிகழ்வுகளில் மீளாய்வு நோக்கத்திற்காக கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) முறையான அடித்தள நிலஅளவை செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்தில் செய்யப்பட்டிறாததுடன் அதன் பெறுபேறாக அதிவேகப்பாதையின் பகுதி – III இன் நிர்மானத்தளத்திலிருந்து மதிப்பிடப்பட்ட அளவு 1,651,700 மெட்றிக்தொன் அகற்ற எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 824,816 மெற்றிக்தொன் அடித்தள மண் 2017 திசெம்பர் 31 வரை அதிகமாக தோண்டி அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் சமூக விளைவுகள் மீதான நிலஅளவைகள் செய்து முடிக்கப்பட்டிறாததுடன் மொத்தமாக ரூபா 635 மில்லியன் செய்யப்பட்ட நிர்மானத்தின் மீதெழுந்த வாழ்வதற்கு

பாதுகாப்பற்ற நிலைமைக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக, அதிவேகப்பாதையின் 62+073 கிலோமீற்றர்கள் தொடக்கம் 65+871 கிலோமீற்றர்கள் வரையான இடத்திலுள்ள பாலங்களின் தளத்தின் மேலதிக கொங்ரீற் சுவர்களை நிர்மானிப்பதற்கு செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(உ) சிவில் நிர்மான வேலைகள் மீது ஆய்வு கூட பரிசோதனையை செய்வதில் ஈடுபட்டிருந்த ஒரு தனியார் கம்பனி ஒலி எழுப்புதல் பரிசோதனைகள் மீது வழங்கிய அறிக்கைகள் போலியான கையொப்பங்களுடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அறிக்கைகளின் செல்லுபடியான தன்மை மீது உரிய தனியார் கம்பனியினால் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளாமையும் கணக்காய்வாளர்களிற்கு நேரடியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், விடயத்தை புலனாய்வு செய்யவும் பொறுப்புடைய தரப்பினர்களை அடயாளம் காணவும் செயற்திட்டத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

செயற்திட்டத்தின் சிரேஸ்ட புவியியல் பொறியியலாளர், சிரேஸ்ட போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு பொறியியலாளர் போன்ற முக்கிய பதவிகள் சிவில் நிர்மான வேலைகளின் வெளிக்கள விஜயத்திலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது இதனால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மிருதுவான செயற்பாட்டில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

**3.5 காணி கொள்வனவு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்**

செயற்திட்டமானது படலன்கல, படிஹம்தோட்ட மற்றும் வெடிவேவ வில் 03 மீளச்செலுத்தல் தளங்களை நிறுவியிறுந்ததுடன் மொத்தமாக ரூபா 77.58 மில்லியன் அதன் மீதான சுவீகரிப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்காக செலவிடப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. இருப்பினும், 35 குடும்பங்களில் 06 குடும்பங்கள் மாத்திரமே, முறையான நீர்வழங்கள் வசதிகளின் குறைபாடு, காணி மூடுதல் நடவடிக்கைகள் மற்றும் தலைமை உறுதிப்பத்திரங்களை மாற்றுவதில் தாமதம் போன்ற காரணங்களினால் படலனடகல மீளவழங்கள் தளத்தில் 2018 ஜுன் 30 இல் உள்ளவாறு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தமை தளங்களின் மீதான பௌதீக அவதானிப்புக்கள் மேற்கொண்ட போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், காணித்துண்டுகளின் வரையறைகள் மீள்வழங்கள் தளங்களில் முறையாக செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**3.6 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்**

03 உள்நாட்டு ஆலோசகர்கள் செயற்திட்டத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் அளவைப்பட்டியலின் கீழாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தி மீளாய்வாண்டின் பொது மொத்தமாக ரூபா 975,000 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்து. மேலும், 02 பொறியியல் பயிற்சியாளர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 1.78 மில்லியன் சம்பளம் கூட செயற்திட்டத்தின் நிர்வாக கிரயமாக காட்டுவதற்கு பதிலாக அதே ஒதுக்கீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.